உ

கணபதி துணை.



# முருகர் கவசம்.

சோலை வீரசைவ மடாலயம்.

ஸ்ரீமத் சிவயோக மூர்த்திகளாதீனம்

**அப்பாதுரை ஐயரவர்கள்**

மாணாக்கரும்.

கூடலூர் தாலூக்கா மாளியம்பட்டு கிராமத்திலி
ருக்கும் இராமலிங்க செட்டியார்
குமாரருமாகிய

## இருளப்பசெட்டியாரால்,

இயற்றியது.

---

ஷை தாலூக்கா மாளியங்பட்டு
மா. சி. ரு. கோவிந்தசாமி சமர்த்தியர்
வேண்டுகோளின்படி.

---

பண்ணுருட்டி.
கமலவல்லி பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

---

ஜனவரிமீ 7—1—1921.

உ

ஸ்ரீ முருகன் றுணை.



## முருகர் சக்கரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

## விநாயகர் துதி.

வெண்பா.

பெருங்கருணையாய் வந்தபெம் மானேயுன்னை
வொருங்க நினையே யான்போற்றும் மருமான்
ந்து வரமளிக்கும் வானவனே நின்னை
ந்துமுகன் கவசம் கூறுவேன்,

---

## முருகர் கவசம்

அகவல்,

ம் சரஹணப — ஓம் சரஹணப
தரகிரியில் — கவனமாய்யிருந்தோன்
தமான — பாசத்தை யருப்பேன்
ள்ளி தெய்வானையை — வளப்புடன் மணிந்தாய்

கொள்ளிமலையில் — கொழுந்துடன் முருகா
மாசிலாமணியே — மங்கையர்கரசே
பாசிழையணிந்த — பரமர முருகா
பிரம்மனைச் சிறையில் — பதைபட யடைத்தால்
சர்ஹண பகுவ — சாதன முருகா
சண்முகானந்த — சங்கர சுதனே
வெண்ணிலக் குழையை — யணிந்ததேவனே
அவுணரைக் கொன்று — முனிவரைக் கார்த்த
பந்தமாகிய — பரமன் முருகா
வுமையவள் மகனே — வோங்கார முருகா
கமையதோளோன் — கார்க்கும் முருகா
விராலி மலையில் — வெகுவாய் யமர்ந்து
சீரானகல்வியில் — சிறந்தவனருளே
கற்குடி பணிந்த — காவலர் முருகா
விற்குடி யுடையோன் — வேந்தர் அதிக்க
நற்றமிழ் முனிக்கு — நலம்பெற செய்தாய்
பெற்றவர்கிடைய — பெருந்தவகோனே
சம்பந்தராகிய — சரவண பவனே
வாங்குவில் குரவர் — வணக்கமாய் புகழ்
கதிர்க்காமத்தில் — கலந்ருள் முருகா
நதி சரஹணபவ — நச்சுதப்பொருளே
முன்வனிறையோன் — முருகா முருகா
பின்னவன் தம்மை — பிரபலமுருகா
கிரவுஞ்சகிரியை — கையினில் குடையாய்
பரம தயாளன் — பாதத்தை போற்றி
ஸ்ரீமத் ஸ்ரீமத் — ஸ்ரீங்கார முருகா
ஸ்ரீமத்க ஸ்ரீமத்க — சீமாலை யணிந்தோய்
ஆருமுருகனே — ஆன முருகர்
பாரினில் வந்து — பலர்கள் புகழ
சிவ சிவ சிவ சிவ — சிவானந்தமுருகா
சிவசண்முகனே — சிவதபயாபரனே
கருங்குழி விழிக்கும் — காருண்ணியமான
திருபரங்குன்றில் — திகழ்ந்தருள் முருகா
அமணர் யிருள்களை — அழித்திட வந்த
தமர்களைகாக்க — தான்வந்த பண்பனே
பள்ளிவாசல் — பாங்குடனிருக்க
நள்ளிருள் தன்னில் — நயந்தய வந்த
குழலின் மொழியாய் — குலந்தருள் விளக்க
மயிலா சலத்தில் — மரமரு முருகா
செய்யுமலையில் — செழுந்தருள் நாதா

# முருகர் கவசம்.

அப்புகலவை — அழகுடனனிந்த
கயிலையிலிருந்த — காட்சியும் தோன்ற
அயில் சிலம்விழி — அரம்பையர் பரவ
வெங்கிட கிரியில் — வேதியர் துதிக்க
பங்கியருலகில் - பக்ஷமாய் யிருந்த
அநாதியாகிய - அமண் பெண்கள் துதிக்க
விநாயக மலையில் - வியர்ந்தவன் கருணை
ஓம் பரிபூரண - ஓம் அரிச்சகா
ஆம்வும்பகா - ஆனந்த முருகா
வசுக்கள் துதிக்க - வரந்தரு குமரா
பசுக்கள் வாழ்த்த - பண்புருதேவா
மாதவர்ப் புகழ - மாமணி அழகா
ஆபத்து காந்தவர் - ஆநந்த முருகா
கண்டிகை பூண்ட - கவின் பெறபெம்மான்
தண்டிகை தன்னில் - தான்காரு முருகா
கொள்ளி வாயலகை — கோபித்தலர
நன்னிருள் தன்னை - நயமாய் போக்கி
கன்னிகை யிருவர் - கவனமாய் போற்ற
மன்னவர் புகழ - மகிழ்ந்தருள்சோதி
துங்கக்குன்ழையைய - தொங்க யணிந்தோய்
பங்கயன் பணிய - பாலகமுருகா
அபயம் அபயம் - அநந்தவா முருகா
சுயமருள் மங்கலம் - சுந்தரவேலவர்
கோழிமயிலும் - கொழுந்தருள் யேற
வாழுமனிதர்கள் - வழி வழி போற்ற
ஓம் வசியவசிய - ஓங்காரவசிய
ஸ்ரீமத் சிவசிவ - ஸ்ரீங்கார முருகா
பசியென்று வந்த - பாங்குடன் காத்த
நசிய நசிய - நயவந்த கண்ணே
கன்ருல் விளவெறிந்த - கண்ணன் துதிக்க
நன்குற்றத்தூரில் - நான்வந்துதிக்க
மாற்ருர் தம்மை - மாளச்செய்த
தேற்ரு யெனக்கு - தெளிவிக்க முருகா
ஆறுமுகத்தோய் - அபயம் வுனக்கு
சந்தன கிரியில் - சயந்தன முருகா
பிரான் மருயில் - பிறந்த குமார
தாரத்தலமான - தவசிகள் வாழ்த்த
வர்மக்கலையா - வங் கங் கங் காங்
தவமணிந்தோய் - தயங்கும்பரனே
இடர்தனி தன்னை - இயந்தவன் முருகா

# முருகர் கவசம்.

குடாகி தன்னில் - குழந்தளி முருகா
பெருனந்தம் - பெருக விளங்க
நாருமலையில் - நலந்தருள் முருகா
ணம் ணம் சம் சம் - ணங் கங் சங் சங்
தம் சதம் வம் வம் - தாங்க முருகா
பன்னிருதோளும் - பாங்குடன் விளங்க
உன்னை யானும் - உகிந்துதிபெற
இடப மலையில் - யெல்லோரும் புகழ
நடனம்செய்த - நாம் யதைகோர
பன்றிமலையில் - பாங்குடன் யிருந்த
நன்மை யுன்மை - நாங்களுமடைய
அட்டமாசித்தியை - அருள் பெறசெய்த
துஷ்டதேவதியை - துரத்திடும் முருகா
காக்கமுருகா - காவாய்க் காவாய்
கோக்கொளி தன்னில் - கொளித்திடு முருகா
குன்மமதனை - குலைத்திடும் முருகா
கன்மவினையை - கலைத்திடு வேந்தே
அணுவமாயை - அழித்திடுதேவே
பாணுமதியை - பாங்குடன் விளங்க
மங்கைய ஸ்திரிகள் - மகிஷ்சியாய் பாட
கொங்கலர் யணிந்தோய் - கொழுந்தவன் முருகா
மண்குன்ற வாசிகள் - மகிழ்ந்தருள் போற்ற
பண்ணு மிசைய - பாங்குடன் முருகா
பில்லி சூனியம் - பிறந்தருள் வந்த
கொல்லி மலையில் - கொழுந்தருள் முருகா
சங்கர சங்கர - சயிலம் முருகா
வங்கம் கம் காம் - வாழ்ந்தருள் முருகா
தலைவலி தன்னை - தவித்திடும் மருளா
கைவலியதனை - கரந்திடுமுருகா
வாழி வாழி - வாழி முருகா
வாழி முருகா - வாழி முருகா
ஆறுமுகவா - ஆறுமுருகா
முருகா முருகா - முருகா முருகா
முருகா முருகா - முருகா முருகா
முருகா முருகா - முருகாகோனே

முற்றிற்று